கவனிக்க .- 2025.08.22 ஆந் திகதிய 2451 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியவை ( தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2452 - 2025 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2025.08.29

2452ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1370 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1371 |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1373 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1378 |
| ஏல விற்பனைகள் | 1379 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, செத்தெம்பர் மாதம்19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 04ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1369 - B 82714 - 403 (2025/08)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

### நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு

### பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2025.09.13 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த நீதிமன்ற பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதி மன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏலவிற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏலவிற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

டி. அண்ணாதுரை,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2025, ஓகத்து 07.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்**

| *தொ. இல.* | *வழக்கிலக்கம்* | *பதிவு இல.* | *சான்றுப்பொருட்களின் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 1. | AR/1511/2023 | EP- BED-3798 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2. | 68378/ EX/2023 | EP- HB-1483 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3. | 61907/ MT/2020 | EP- BFL-8066 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4. | 60492/ EX/2020 | EP- BDL-0770 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 5. | 68090/ EX/2023 | EP- BDR-4950 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | 63619/ PC/2021 | EP- XQ-9880 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | 58144/ PC/2018 | - | LCD தொலைக்காட்சிப் பெட்டி | 01 |
| 8. | 59918/ EX/2020 | - | கேஸ் சிலிண்டர் | 01 |
| 9. | 59918/ EX/2020 | - | கேஸ் அடுப்பு | 01 |
| 10. | AR/109/2025 | - | கேஸ் அடுப்பு | 01 |
| 11. | 4633/ EX/2025 | - | கேஸ் சிலிண்டர் | 01 |
| 12. | 4633/ EX/2025 | - | கேஸ் அடுப்பு | 01 |
| 13. | 3271/Misc/2025 | - | கத்தி | 01 |
| 14. | 3271/Misc/2025 | - | கோடாரி | 01 |
| 15. | 3271/Misc/2025 | - | கோடாரி | 02 |
| 16. | 5151/FD/2025 | - | றில் மெசின் | 01 |

| தொ. இல. | வழக்கிலக்கம் | பதிவு இல. | சான்றுப்பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 17. | 5151/FD/2025 | - | ரவுட்டர் ( Saw machine) | 01 |
| 18. | 2030/S/2024 | - | சவள் | 01 |
| 19. | 2061/S/2024 | - | சவள் | 02 |
| 20. | 6510/S/2025 | - | சவள் | 01 |
| 21. | 6552/S/2025 | - | சவள் | 01 |
| 22. | AR/ 157/24 | - | வெற்று பரல் | 04 |
| 23. | NO Number | - | வெற்று பரல் | 50 |
| 24. | NO Number | - | தராசு | 02 |
| 25. | NO Number | - | தராசு | 02 |
| 26. | NO Number | - | தாச்சி | 03 |
| 27. | 117/Misc/ 2025 | - | சவள் | 01 |
| 28. | NO Number | - | பானை | 05 |

08- 285

---

**அறிவித்தல்**

2025.08.16 ஆந் திகதியன்று வாகரை சுற்றுலா நீதவான் நீதிமன்றில் காலை 9.00 மணியளவில் பகிரங்க ஏலவிற்பனை நடைபெறுவதாக கடந்த 2025.07.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களால் அன்றைய தினம் ஏலவிற்பனையானது நடைபெறவில்லை என்பதுடன் அன்றைய தின ஏல விற்பனையானது எதிர்வரும் 2025.09.13 ஆந் திகதியன்று நடைபெறும் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

எம். ஐ.எம்.றிஸ்வி,
மாவட்ட நீதிபதி.

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
வாகரை.

08- 295

---

# ஆயவிற்பனையும் குத்தகையும்

**திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு**

கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை -2026

2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2026 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத் தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2025.09.30 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கள்ளுக் குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப் பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக்

கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைனகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக இலச்சினை பொறிக்கப்பட்ட கடித உறையொன்றில் இட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத் தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச் செய்ய முடியும்.

கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப் பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப் பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2025.09.30 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.

எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.

மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2025.10.30 ஆந் திகதி மு.ப. 10.30 க்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.

இச் சலுகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிதியில் இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாக செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கின்ற போது அறிந்து கொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின் அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திருந்து பெற்றுகொள்ள முடியும்.

W.W.M. D.குமாரி,
பிரதேச செயலாளர்,
திவுலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலப்பிட்டிய,
2025, ஓகத்து 15.

**அட்டவணை**

| *இல.* | *தவறணையின் பெயரும் இலக்கமும்* | *பிரிவு* | *கிராமம்* | *தவறணை ஆரம்பமாகும் நேரம்* | *தவறணை மூடும் நேரம்* | *கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா* | *கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும்* |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 27-தாகொண்ண | திவுலப்பிட்டிய | தாகொண்ண | முற்பகல் 11.00<br>பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00<br>பிற்பகல் 8.00 | 4,000.00 | 2025.09.30<br>முற்பகல் 10.30 |

08- 281

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

**பகிரங்க அறிவித்தல்**

**கம்பனியின் பெயர் மாற்றம்**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் 2025 ஆம் ஆண்டு ஓகத்து 11 ஆந் திகதி அமுலுக்கு வரும் வகையில் மாற்றப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) இன் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

*கம்பனியின் முன்னைய பெயர் :* டிஜிடல் கன்டென்ட் (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனியின் பதிவிலக்கம் :* பீவீ 114736
*கம்பனியின் பதிவு முகவரி:* இல. 3/2, -'சவ்ரனோ 39' 11/3, சுனெத்ராதேவி வீதி, கொஹுவல, நுகேகொட
*கம்பனியின் புதிய பெயர் :* டீசீ குரூப் (பிரைவேட்) லிமிடெட்

எஸ்.டபிள்யூ.லீகல் ,
கம்பனிச் செயலாளர்.

08- 275

---

**கம்பனிகளை ஒன்றிணைத்தல் தொடர்பான அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242( 1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய 242(3) (ஆ) பிரிவின் நியதிகளுக்கு அமைவானது.-

தென்னேவத மினி ஹைட்ரோபவர் ஹோல்டிங்ஸ் ( பிரைவேட்) லிமிடெட் (பீவீ 87723) நிறுவனத்தை டபிள்யூ. கே. வீ. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (பீவீ 11882) நிறுவனத்துடன் ஒன்றிணைப்பதற்காக முன்மொழியப்பட்ட அறிவித்தல் இத்தால் விடுக்கப்படுகின்றது. சொல்லப்பட்ட கம்பனிகள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழும் , 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய 242(3)(ஆ) பிரிவின் நியதிகளின் கீழும் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியான "டபிள்யூ. கே.வீ. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்" இருக்கும் என்பதோடு அதன் பின்னர் தென்னேவத மினி ஹைட்ரோபவர் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் செயற்படுவது நிறுத்தப்படும். தென்னேவத மினி ஹைட்ரோபவர் ஹோல்டிங்ஸ் ( பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் 2025, செத்தெம்பர் 30 ஆந் திகதியில் அமுலுக்கு வரும் வகையில் டபிள்யூ. கே.வீ. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு கையளிக்கப்படும்.

பணிப்பாளர் சபைகளின் கட்டளைப்படி,

டபிள்யூ. கே.வீ. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
மற்றும் தென்னேவத மினி ஹைட்ரோபவர் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.

08- 276/1

---

**கம்பனிகளை ஒன்றிணைத்தல் தொடர்பான அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242( 1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய 242(3) (ஆ) பிரிவின் நியதிகளுக்கு அமைவானது.-

டபிள்யூ. கே. வீ. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (பீவீ 11882) நிறுவனத்தை தென்னேவத மினி ஹைட்ரோபவர் ஹோல்டிங்ஸ் ( பிரைவேட்) லிமிடெட் (பீவீ 87723) நிறுவனத்துடன் ஒன்றிணைப்பதற்காக முன்மொழியப்பட்ட அறிவித்தல்

இத்தால் விடுக்கப்படுகின்றது. சொல்லப்பட்ட கம்பனிகள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழும் , 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய 242(3)(ஆ) பிரிவின் நியதிகளின் கீழும் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியான "டபிள்யூ. கே.வீ. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்" இருக்கும் என்பதோடு அதன் பின்னர் தென்னேவத மினி ஹைட்ரோபவர் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் செயற்படுவது நிறுத்தப்படும். தென்னேவத மினி ஹைட்ரோபவர் ஹோல்டிங்ஸ் ( பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் 2025, செத்தெம்பர் 30 ஆந் திகதியில் அமுலுக்கு வரும் வகையில் டபிள்யூ. கே.வீ. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு கையளிக்கப்படும்.

பணிப்பாளர் சபைகளின் கட்டளைப்படி,

டபிள்யூ. கே.வீ. ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
மற்றும் தென்னேவத மினி ஹைட்ரோபவர் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.

08- 276/2

---

**பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய 2025, ஓகத்து 11 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு சொல்லப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் விதிகளின் பிரகாரம் கேரி மோல்ஷிப் லோஜிஸ்டிக்ஸ் லங்கா ( பிரைவட்) லிமிட்டட் ஆனது தனது பெயரை கே.மோல்ஷிப் லோஜிஸ்டிக்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட் ஆனது தனது பெயரை கே. மோல்ஷிப் லோஜிஸ்டிக்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட் என மாற்றிக்கொள்கிறது.

*கம்பனியின் பழைய பெயர் :* கேரி மோல்ஷிப் லோஜிஸ்டிக்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம் :* PV 86379
*பதிவு முகவரி:* இல. 55/16, வொக்ஷால் லேன், கொழும்பு 02
*கம்பனியின் புதிய பெயர் :* கே. மோல்ஷிப் லோஜிஸ்டிக்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோப்பரேட் சேர்விஸ்சஸ் (பிரைவட்)
லிமிட்டட்,
செயலாளர்கள்,
கே. மோல்ஷிப் லோஜிஸ்டிக்ஸ் லங்கா
(பிரைவட்) லிமிட்டட் .

08- 277

---

**செலிங்கோ செலான் ப்ரொபேர்ட்டிஸ் லிமிட்டட்**

**நிர்வாகி நியமனம்**

இலக்கம் 21, அமரசேகர மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. வோல்டர் லந்துவஹெட்டி பதவியை இராஜிநாமா செய்ததால், இலக்கம் 31, பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தையில் வசிக்கும் ஏக்கநாயக்க முதியன்சேலாகே மங்கள போயகொட ஆகிய நான், ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 511202710 V ) மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் பணிப்பாளர்கள் குழுவின் தீர்மானத்திற்கமைய 2025.08.14 ஆந் திகதி முதல் நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன். இலக்கம் 02, கவர் வீதி, கொழும்பு 05 என்பது எனது உத்தியோகபூர்வ முகவரியாகும்.

ஈ.எம்.எம். போயகொட.

08- 284

**பொது மக்களுக்கான அறிவித்தல்**

ஹேகார்ப் பிஎல்சி (PQ 59) மற்றும் அல்ட்ராகார்ப் (பிரைவேட்) லிமிடெட் (PV 75201) என்பவற்றின் ஒருங்கிணைப்பு தொடர்பானது

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ("சட்டம்") கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242(3)(ஆ) இன் கீழ், ஹேகார்ப் பிஎல்சி ( கம்பெனி இலக்கம் PQ 59) மற்றும் அல்ட்ராகார்ப் ( பிரைவேட்) லிமிடெட் ( கம்பெனி இலக்கம் PV 75201) ஆகியவை சட்டத்தின் பிரிவு 242 இன்படி ஒரே நிறுவனமாக இணைக்கப்படுகின்றன என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் ஹேகார்ப் பிஎல்சி என இருக்கும், மேலும் இந்த இணைப்பு 2025, ஒற்றோபர் 1ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமான ஹேகார்ப் பிஎல்சி யின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் இயங்கும்.

ஒருங்கிணைப்பு முன்மொழிவின் பிரதிகளை இணைந்த நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்குநராலும் அல்லது இணைந்த நிறுவனங்களில் பொறுப்பில் உள்ள எந்தவொரு நபராலும், இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் சாதாரண வியாபார நேரங்களில் பார்வையிடலாம்.

சபைகளின் உத்தரவின்படி,

ஹேகார்ப் பிஎல்சி மற்றும் அல்ட்ராகார்ப்
(பிரைவேட்) லிமிடெட்,
ஹேலீஸ் குரூப் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2025, ஓகத்து 22.

08- 309

---

**கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய 2025.08.11 ஆந் திகதி முதல் பின்வரும் கம்பனி பெயர் மாற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பழைய பெயர் :* வெல்னஸ் புறொஜெக்ட் (பீவீடீ) எல்டீடி
*கம்பனி பதிவு இல. :* PV 00268817
*கம்பனி பதிவு முகவரி:* இல. 16, மலலசேக்கர பெதெச, கொழும்பு - 07
*கம்பனியின் புதிய பெயர் :* ப்ரிவாரா கலெக்டிவ் ( பீவீடீ) எல்டீடி

எஸ்.எஸ். பீ. கோர்ப்பரேட் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

08- 311

### பெயர் மாற்றத்திற்கான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் விதிகளுக்கமைவாக கீழ்க்காணும் பெயர் மாற்றத்திற்கான அறிவித்தல் இத்தால் விடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் பழைய பெயர் :* ச்பைஸ் லேன் (பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம் :* PV 98870
*பதிவு முகவரி:* த.பெ.611, 341, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
*கம்பனியின் புதிய பெயர் :* ஈஸ்டன் ஹாவெஸ்ட் ( பிரைவட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கொழும்பு கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்)
லிமிட்டட்,
செயலாளர்கள்.

08- 328

---

### பெயர் மாற்றத்திற்கான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய கீழ்க்காணும் பெயர் மாற்றம் பற்றி இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் பழைய பெயர் :* சிலோன் மெட்எக்ஸ்புளோ (பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இல. :* PV 00289945
*பதிவு முகவரி:* 64/17/13, பிரைம் கிரைன்ட், வோர்ட் பிளேஸ், கொழும்பு - 07
*கம்பனியின் புதிய பெயர் :* சி.எம்.ஹொலிடே கம்பனி (பீவீட) எல்டீடி

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கொழும்பு கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்)
லிமிட்டட்,
செயலாளர்கள்.

08- 329

---

### பொது மக்களுக்கான அறிவித்தல்- நிறுவனத்தின் பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) இன் அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் நிலை பிரைவேட் லிமிடெட் என்பதிலிருந்து பப்ளிக் லிமிடெட் என பெயர் மாற்றப்படுகின்றன என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது

*நிறுவனத்தின் புதிய பெயர் :* பென்டான்ஸ் ஸ்மார்ட் பெசிலிட்டீஸ் லிமிடெட்
*நிறுவனத்தின் முன்னாள் பெயர் :* பென்டான்ஸ் ஸ்மார்ட் பெசிலிட்டீஸ் (பிரைவேட்) லிமிடெட்
*பதிவு இல. :* PV 90158
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10

*நிறுவனத்தின் புதிய பெயர் :* எனர்ஜிநெட் லிமிடெட்
*நிறுவனத்தின் முன்னாள் பெயர் :* எனர்ஜிநெட் (பிரைவேட்) லிமிடெட்
*பதிவு இல. :* PV 6443
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10

*நிறுவனத்தின் புதிய பெயர் :* ஹேலிஸ் மொபிலிட்டி லிமிடெட்
*நிறுவனத்தின் முன்னாள் பெயர் :* பென்டான்ஸ் மொபிலிட்டி (பிரைவேட்) லிமிடெட்
*பதிவு இல. : PB* 598 PV
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10

மேற்கூறிய சபைகளின் உத்தரவுகளின் பேரில்,

ஹேலீஸ் குரூப் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

2025, ஓகத்து 29.

08- 330

---

### பொது மக்களுக்கான அறிவித்தல்- நிறுவனத்தின் பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) இன் கீழ் இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. அதற்கிணங்க, பின்வரும் நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 8 இன் விதிகளின்படி தமது பெயரை பின்வருமாறு மாற்றியுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

*நிறுவனத்தின் புதிய பெயர் :* பென்டன்ஸ் மொபிலிட்டி (பிவிடி) லிமிடெட்
*நிறுவனத்தின் முன்னாள் பெயர் :* பென்டான்ஸ் மொபிலிட்டி (பிரைவேட்) லிமிடெட்
*பதிவு இல. : PB* 598 PV
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10

சபையின் உத்தரவுகளின் பேரில்,

ஹேலீஸ் குரூப் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

2025, ஓகத்து 29.

08- 331

---

### கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(30) (ஆ) இன் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் தருகின்றோம்.

*கம்பனியின் முன்னைய பெயர் :* சிலோன் ப்ரின்டர்ஸ் பிஎல்சி
*கம்பனி இலக்கம் :* PQ 150
*கம்பனி பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல. 111, டி பி ஜயா மாவத்தை, கொழும்பு 10
*கம்பனியின் புதிய பெயர் :* கர்ணர் ஹவுஸ் குளோபல் சொலூஷன்ஸ் பிஎல்சி
*பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி :* 2025, ஓகத்து 18 ஆந் திகதி

கர்ணர் ஹவுஸ் குளோபல் சொலூஷன்ஸ் பிஎல்சி என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி டபிள்யூ கோப்பறேட் செக்ரட்டேரியல் (பீவீடி) எல்டிடீ,
கம்பனிச் செயலாளர்கள்.

2025, ஓகத்து 18 ஆந் திகதி.

08- 346

# அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகையில் விற்றல் - 2026

## மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவு

அரசினால் அனுமதிக்கப்பட்ட கீழ் காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2026, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2026, திசெம்பர் 31 ஆந் திகதி வரை தனியுடமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

1. 1982.08.20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.

2. மதுபானம் வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

02. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய குறிப்பிட்ட மாதிரிப் படிவங்கள் மூலம் கேள்விப் பத்திரங்களை ரூ.5,000 இற்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதே போன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடம் வரை செல்லுபடியாகும். வாடகை மூலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகை காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆவணங்கள் சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்தை முன்னளித்தல் வேண்டும் . அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடி காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு முன்பதாவது முன்னளித்தல் வேண்டும்.

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து,
(ஆ) கொழும்பு 02 ச்டேப்லற் வீதி மதுவரி அலுவலகத்திலிருந்து
(இ) கொழும்பு மதுவரி சபை அலுவலகத்திலிருந்து

03. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் மேல் இடது பக்க மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும். "2026 ஆம் வருடத்தில் மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகளுக்கான கேள்விப் பத்திரம்" 2025.09.22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளரிற்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப் பத்திரங்களை பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

04. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படு வதுடன் குறிப்பிட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக்கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்ததுதல் வேண்டும்.

05.தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுத்தலுக்கான நிபந்தனைகளை கைச்சாத்திட அல்லது குறிப்பிட்ட பிணைப்பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப் பத்திர பிணைப்பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுபானம் வரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையாக பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

06. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களை மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 21,22 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை . அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் பட்டியல் கீழ் வருமாறு.

| *(ஏ)* *இலக்கம்* | *(பீ)* *பிரிவு* | *(சீ)* *பிதேச தவறணை மதுபானம் உள்ளடக் கப்படும்* | *(டீ)* *மதுபானத் தவறணை திறக்கப்படும் நேரம்.* | *(ஈ)* *மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம்* | *(எப்)* *கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப்படும் தொகை* | *(ஜீ)* *கேள்விப்ப பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் திகதி* | *(எச்)* *விற்கப் படும் திகதி* |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | மொரட்டுவை மாநகர சபை எல்லைக்குள் பிரிவு இல.21.22 | மொரட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் பிரிவு இல.21,22 பிரதேசத்தில் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் மாத்திரம் | மு.ப. 11.00 - பி.ப.5.00 | பி.ப. 2.00 - பி.ப.8.00 | 5,000.00 | மு.ப. 10.30 | 2025.09.22 |

08. மேலதிக விபரங்களை மொரட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

09. முக்கியம்.- 2025.09.22 ஆந் திகதிக்கு வாடகைக்கு விட இல்லாத வெளிநாட்டு மதுபான தவறணைகள் 2025.10.21 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மறுபடி குத்தகைக்கு விற்கப்படும்.

எஸ்.பீ.கிரிவத்துடுவ,
பிரதேச செயலாளர்,
மொரட்டுவை.

மொரட்டுவை பிரதேச செயலகம்,
மொரட்டுவை,
2025, ஓகத்து 07.

08- 286

---

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்.

பினால் இன்வெஸ்மண்ட்ஸ் (பிரைவெற்) லிமிடெட்
கணக்கு இல.: 0075 1000 0001

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2023.10.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.11.24ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் ( Gazette) 2023.12.04 ஆந் திகதிய திவயின (Divaina) , ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் பதினைந்து கோடியே நாற்பத்தி ஐந்து இலட்சத்து இருபத்தி ஓராயிரத்து இருநூற்று இருபத்தி ஒரு ரூபா முப்பத்தி ஒரு சதம் (ரூபா 154,521,221.31) 2023, ஓகத்து 22 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஏழு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 75,000,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் இரண்டு ஐந்து வீதம் (16.25%) மேலும் ஒரு கோடியே தொண்ணூற்றி ஏழு இலட்சத்து முப்பத்தி ஓராயிரத்து ஐந்நூற்று அறுபத்தி ஐந்து ரூபா எண்பத்தி எட்டு சதம் (ரூபா 19,731,565.88) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) மேலும் ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபா (ரூபா 18,000,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் இரண்டு ஐந்து வீதம் (16.25%) மேலும் இரண்டு கோடியே பன்னிரெண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து அறுநூற்று எண்பத்தி எட்டு ரூபா நாற்பத்தி ஒன்பது சதம் (ரூபா 21,218,688.49) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு

ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 3388 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான என். யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2025.09.26 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனே வாத்து வஸ்கடு தெபெத்த பாணந்துறை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மொல்லிகொட (இல. 704) கிராம அலுவலர் பிரிவின் மொல்லிகொடை கிராமத்தில் அமைந்த காலி வீதி வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 790/ 15 மற்றும் 790/ 16 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் வய். பீ. கே. கொஸ்த்தா என்பவரால் தயாரிக்கப்படட 2006, செத்தெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 3664 ஆம் எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட (கொரட்டுவெவத்த எனும் கொட்டுவெவத்த இன் லொட் 1A மற்றும் 1B மற்றும் கொட்டுவெவத்த எனும் கொட்டுவெவத்த இன் 1/ 3 இன் ஒரு பகுதி, கொட்டுவெவத்த எனும் கொட்டுவெவத்த இன் மற்றுமொரு பகுதி மற்றும் கொரட்டுவெவத்த எனும் கொட்டுவெவத்த இன் 2/ 3 ஒரு பகுதி காஹாட்டகாஹாவத்தையின் (பகுதி) என்றழைக்கப்படும் காணிகளின் பிரிக்கப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட காணி என எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட) அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: கஹாட்டகாஹாவத்தையின் ஒரு பகுதி; கிழக்கு: தற்போது மூன்றாம் ஒழுங்கை மற்றும் இல. 3664 எனும் வரைப்படத்தின் லொட் இலக்கங்கள் 2 மற்றும் 3; தெற்கு: லொட் 2 மற்றும் புலுகாஹாவத்த மற்றும் மேற்கு: தற்போது புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான முதிள்ளகாஹாவத்த, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் இரண்டு றூட்கள் மற்றும் முப்பத்தி நான்கு தசம் ஐந்து சைபர் பேர்ச் (01ஏ. 02றூ. 34.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள் கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3664 எனும் வரைபடத்திற்கு அமைவாக பாணந்துறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D 372/ 109 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

08- 339

---

## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397 ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல.: 82635574. 87953779.

எம்பிலிப்பிட்டிய, புதிய நகரம், ஹொஸ்பிட்டல் பிளேஸ், இல. 6666 எனும் முகவரியைச் சேர்ந்த திரு. சேதரஹெட்டிகே சமிந்த பிரபாத் சேதரஹெட்டி ஈடு வைத்த ஆதனத்தின் விற்பனை,

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்2023.12.08 ஆந் திகதி 2362 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023, திசெம்பர் 06 ஆந் திகதி புதன்கிழமை தினகரன், தினமின மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் அதே இடத்தில் வைத்து இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ, என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகம்வே ஹேவாவசம் துசித்த கருணாரத்ன 2025.09.22 ஆந் திகதி பின்வரும் நேரங்களில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. உத்தரவு பெற்ற நில அளவையாளர் G.W.K. மனம்பேரி தயாரித்த 2015,யூலை 3 ஆந் திகதியிட்ட வரைபட இல. 7151 இல் விபரித்த காணித்துண்டு A -மு.ப. 8.30 மணிக்கு.
2. உத்தரவு பெற்ற நில அளவையாளர் G.W.K. மனம்பேரி தயாரித்த 2015,நவெம்பர் 28 ஆந் திகதியிட்ட வரைபட இல. 7349 இல் விபரித்த காணித்துண்டு இல. 01 -மு.ப. 9.15 மணிக்கு.
3. உத்தரவு பெற்ற நில அளவையாளர் G.W.K. மனம்பேரி தயாரித்த 2017,யூன் 02 ஆந் திகதியிட்ட வரைபட இல. 8154 இல் விபரித்த காணித்துண்டு D -மு.ப. 10.30 மணிக்கு.

4. உத்தரவு பெற்ற நில அளவையாளர் G.W.K. மனம்பேரி தயாரித்த 2017,யூன் 02 ஆந் திகதியிட்ட வரைபட இல. 8154 இல் விபரித்த காணித்துண்டு B -மு.ப. 10.45 மணிக்கு.
5. உத்தரவு பெற்ற நில அளவையாளர் G.W.K. மனம்பேரி தயாரித்த 2017,யூன் 02 ஆந் திகதியிட்ட வரைபட இல. 8154 இல் விபரித்த காணித்துண்டு A -மு.ப. 11.00 மணிக்கு.
6. உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.M. இலங்கசிங்ஹ தயாரித்த 2007, பெப்புருவரி 08 ஆந் திகதியிட்ட வரைபட இல. 2007/ 262 இல் விபரித்த காணித்துண்டு A -பி.ப. 12.30 மணிக்கு.
7. உத்தரவு பெற்ற நில அளவையாளர் G.W.K. மனப்பேரி தயாரித்த 2017, ஒற்றோபர் 13 ஆந் திகதியிட்ட வரைபட இல. 8335 இல் விபரித்த காணித்துண்டு இல. 1 -பி.ப. 2.30 மணிக்கு.

## மேற்குறிப்பிட்ட அட்டவணை

1. சப்பிரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன கோரளையில் தியபொடகம் பற்றுவில் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் எம்பிலிப்பிட்டிய நகர சபை எல்லைகளுள் பல்லேகம கிராம அலுவலர் பிரிவில் பல்லேகமயில் அமைந்த வரிமதிப்பு இல. 01 MKR 196, 198 ஐக் கொண்ட "இடம் கட்டிய" என அழைக்கும் காணி வரைபட இல. 779 இல் 506B இல் அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு 506B வடக்கில் எம்பிலிப்பிட்டியவிலிருந்து சூரியவெவ வரையான பாதையும், கிழக்கில் காணித்துண்டு 515 உம் தெற்கில் காணித்துண்டு 506 இன் மீதிப்பாகமும் மேற்கில் காணித்துண்டு 498 உம் எல்லைகளாகக் கொண்டு அறுபது பேர்ச் (00ஏ. 00றூ. 60பே) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி எம்பிலிப்பிட்டிய மாவட்ட காணிப் பதிவகத்தில் L 163/ 34 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி அண்மைய அளவை வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

பல்லேகமயில் அமைந்த வரிமதிப்பு இல. 01 MKR 196, 198 ஐக் கொண்ட "இடம் கட்டிய"என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. டப்ளியூ. கே. மனம்பேரி தயாரித்த 2015, யூலை 03 ஆந் திகதியிட்ட வரைபட இல. 7151 காணித்துண்டு A என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு A வடக்கில்: பிரதான பாதையும்; கிழக்கில்: கொடிதுவக்கு உரிமை கோரும் காணியும்; தெற்கில்: வரைபட இல. 7029 இல் காணித்துண்டு 2 உம்; மேற்கில்: சேதர ஹெட்டி உரிமை கோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பதினேழு தசம் ஏழு ஐந்து பேர்ச் (00ஏ. 01றூ. 17.75பே) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண் மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

இலங்கைவங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

"மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏல விலை கூறுவோர் தொ.பே. இல. 047- 2220180, ஊடாக ஹம்பாந்தோட்டை இலங்கை வங்கிக்கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன. "

1. **பணம் செலுத்தும் முறை:** ஏல விலை கூறல் வெற்றியடைந்ததும் கொள்வனவாளர் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

1.கொள்வனவாளர் கொள்வனவு விலையில் 10 % ஐ (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்;
2. வற் (VAT) கட்டணங்கள் ( ஏற்புடையதாயின்);
3. விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% ( ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்;
4. ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்;
5. ஏற்புடையதாயின் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ;
6. ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையின் 10% ஐ ஏல விற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் அத்துடன் விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% ( எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக் கட்டணம் மற்றும் விற்பனை நிபந்தனைகளையும் விற்பனைச் சான்றுதழையும் அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும்.

மேல் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்க மறுப்பின் ஏல விலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

**ஆதனத்துக்கான பிரவேச வழி:** எம்பிலிப்பிட்டிய மணிக்கூட்டு கோபுரச்சந்தியிலிருந்து பெல்மடுல்ல பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்று மொரகெட்டிய பாதையில் வலப்புறமாக சுமார் 700 மீற்றர்கள் சென்றதும் ஆதனத்தை அடையலாம். இக்காணி மேற்குறிப்பிட்ட பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

2. சப்பிரகமுவ மாகாணம். இரத்தினபுரி மாவட்டத்தில். கொலொன்ன கோரளையில், தியபொடகம் பற்றுவில் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் எம்பிலிப்பிட்டிய நகர சபை எல்லைகளுள் பல்லேகம கிராம அலுவலர் பிரிவில் பல்லேகமயில்

அமைந்த காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. டப்ளியூ. கே. மனம்பேரி தயாரித்த 2015, நவெம்பர் 28 ஆந் திகதியிட்ட வரைபட இல. 7349 இல் காணித்துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு 01 வடக்கில்: இக் காணியின் மீதிப் பாகமும்; கிழக்கில்: இக்காணியின் மீதிப்பாகமும்; தெற்கில்: பிரதான பாதையும்; மேற்கில்: இக்காணியின் மீதிப்பாகமும் வரைபட இல. 7220 இல் காணித்துண்டு A யும் எல்லைகளாகக் கொண்டு பதினேழு தசம் ஆறு இரண்டு பேர்ச் (00ஏ. 00றூ. 17.62பே) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி எம்பிலிப்பிட்டிய மாவட்ட காணிப் பதிவகத்தில் L 105/ 101 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

"மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏல விலை கூறுவோர் தொ.பே. இல. 047- 2220180, ஊடாக ஹம்பாந்தோட்டை இலங்கை வங்கிக்கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன. "

1. **பணம் செலுத்தும் முறை:** ஏல விலை கூறல் வெற்றியடைந்ததும் கொள்வனவாளர் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

1.கொள்வனவாளர் கொள்வனவு விலையில் 10 % ஐ (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்;
2. வற் (VAT) கட்டணங்கள் ( ஏற்புடையதாயின்);
3. விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% ( ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்;
4. ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்;
5. ஏற்புடையதாயின் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ;
6. ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையின் 10% ஐ ஏல விற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் அத்துடள் விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% ( எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக் கட்டணம் மற்றும் விற்பனை நிபந்தனைகளையும் விற்பனைச் சான்றிதழையும் அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும்.

மேல் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்க மறுப்பின் ஏல விலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

**ஆதனத்துக்கான பிரவேச வழி:** எம்பிலிப்பிட்டிய மணிக்கூட்டு கோபுரச்சந்தியிலிருந்து பெல்மடுல்ல பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்று மொரகெட்டிய பாதையில் வலப்புறமாக சுமார் 300 மீற்றர்கள் சென்றதும் ஆதனத்தை அடையலாம். இக்காணி மேற்குறிப்பிட்ட பாதையின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

3. சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன கோரளையில் தியபொடகம் பற்றுவில் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் எம்பிலிப்பிட்டிய நகர சபை எல்லைகளுள் உடகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் உடகமயில் அமைந்த வரிமதிப்பு இல. 04 CORRR 370 ஐக் கொண்ட "ஹிங்குரெ ஆர அஸ்ஸெத்தும" இன் பகுதி என அழைக்கும் காணியின் காணித்துண்டு D என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு D, வடக்கில்: இவ்வரைபடத்தில் காணித்துண்டு B உம் அதே காணியின் மீதிப் பாகமும்; கிழக்கில்: அதே காணியின் மீதிப்பாகமும் இவ்வரைபடத்தில் காணித்துண்டு E உம்; தெற்கில்: இவ்வரைபடத்தில் காணித்துண்டு E உம்; மேற்கில்: இவ்வரைபடத்தில் காணித்துண்டு C உம் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. டப்ளியூ. கே. மனம்பேரி தயாரித்த 2017, யூன் 02 ஆந் திகதியிட்ட வரைபட இல. 8154 இல் எல்லை நிர்ணயித்ததன் பிரகாரம் இரண்டு றூட் பதினொன்று தசம் ஆறு ஒன்பது பேர்ச் (00ஏ. 02றூ. 11.69பே) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் மற்றும் கட்டிடங்கள் சகலதும் ஆகும். இக்காணி எம்பிலிப்பிட்டிய மாவட்ட காணிப் பதிவகத்தில் L 33/136 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைவங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

"மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏல விலை கூறுவோர் தொ.பே. இல. 047- 2220180, ஊடாக ஹம்பாந்தோட்டை இலங்கை வங்கிக்கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன. "

1. **பணம் செலுத்தும் முறை:** ஏல விலை கூறல் வெற்றியடைந்ததும் கொள்வனவாளர் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

